# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஆறாம் பத்து

## ஐந்தாம் திருமொழி - கலங்க
## திருநறையூர் 2

** கலங்க முந்நீர் கடைந்து * அமுதம் கொண்டு * இமையோர்
துளங்கல் தீர * நல்கு சோதிச் சுடர் ஆய **
வலங்கை ஆழி இடங்கைச் சங்கம் * உடையான் ஊர் *
நலங்கொள் வாய்மை * அந்தணர் வாழும் நறையூரே 1

முனை ஆர் சீயம் ஆகி * அவுணன் முரண் மார்வம் *
புனை வாள் உகிரால் * போழ்பட ஈர்ந்த புனிதன் ஊர் **
சினை ஆர் தே மாம் * செந்தளிர் கோதிக் குயில் கூவும் *
நனை ஆர் சோலை சூழ்ந்து * அழகாய நறையூரே 2

ஆனைப் புரவித் * தேரொடு காலாள் அணி கொண்ட *
சேனைத் தொகையைச் சாடி * இலங்கை செற்றான் ஊர் **
மீனைத் தழுவி வீழ்ந்து எழும் * மள்ளர்க்கு அலமந்து *
நானப் புதலில் * ஆமை ஒளிக்கும் நறையூரே 3

உறியார் வெண்ணெய் உண்டு * உரலோடும் கட்டுண்டு *
வெறியார் கூந்தல் * பின்னை பொருட்டு ஆன் வென்றான் ஊர் **
பொறியார் மஞ்ஞை * பூம்பொழில் தோறும் நடம் ஆட *
நறு நாண்மலர் மேல் * வண்டு இசை பாடும் நறையூரே 4

விடை ஏழ் வென்று * மென்தோள் ஆய்ச்சிக்கு அன்பனாய் *
நடையால் நின்ற * மருதம் சாய்த்த நாதன் ஊர் **
பெடையோடு அன்னம் * பெய்வளையார் தம் பின் சென்று *
நடையோடு இயலி * நாணி ஒளிக்கும் நறையூரே 5

பகு வாய் வன்பேய் * கொங்கை சுவைத்து ஆருயிர் உண்டு *
புகு வாய் நின்ற * போதகம் வீழப் பொருதான் ஊர் **
நெகு வாய் நெய்தல் * பூ மது மாந்திக் கமலத்தின் *
நகு வாய் மலர் மேல் * அன்னம் உறங்கும் நறையூரே 6

முந்து நூலும் முப்புரி நூலும் * முன் ஈந்த *
அந்தணாளன் பிள்ளையை * அஞ்ஞான்று அளித்தான் ஊர் **
பொந்தில் வாழும் பிள்ளைக்காகிப் * புள் ஓடி *
நந்து வாரும் * பைம்புனல் வாவி நறையூரே 7

வெள்ளைப் புரவித் தேர் * விசயற்காய் விறல் வியூகம்
விள்ள * சிந்துக் கோன் விழ* ஊர்ந்த விமலன் ஊர் **
கொள்ளைக் கொழு மீன் உண் * குருகு ஓடிப் பெடையோடும் *
நள்ளக் கமலத் * தேறல் உகுக்கும் நறையூரே 8

** பாரை ஊரும் பாரம் தீரப் * பார்த்தன் தன் *
தேரை ஊரும் * தேவ தேவன் சேரும் ஊர் **
தாரை ஊரும் * தண்தளிர் வேலி புடை சூழ *
நாரை ஊரும் * நல் வயல் சூழ்ந்த நறையூரே 9

** தாமத் துளப * நீள் முடி மாயன் தான் நின்ற *
நாமத் திரள் மாமாளிகை சூழ்ந்த * நறையூர் மேல் **
காமக் கதிர் வேல் வல்லான் * கலியன் ஒலி மாலை *
சேமத் துணையாம் * செப்பும் அவர்க்குத் திருமாலே 10

**அடிவரவு:** கலங்க முனை ஆனை உறியார் விடை பகுவாய் முந்து வெள்ளை பாரை தாமம் அம்பரம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**